II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**LAOP..No. 127 of 2004**

Deposition of witness for the Claimant / CW 3
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 06/08/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | David.S.Pirasitham | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை=

இந்த மனுவில் என் மனைவி தான் கோருனர் என்றால் சரிதான். மனுசொத்துகள் என் மனைவிக்கு சொந்தமான சொத்துகள் ஆகும். அந்த சொத்துகளை நான் தான் பராமரிப்பதாக எனது முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சொத்து மட்டும் அல்ல மருத்துவமனை நிர்வாகத்தையும் நான் தான் கவனித்து வருகிறேன். அதற்காக என் மனைவி எனக்கு அதிகாரம் அளித்துள்ளாரா என்றால் நானும் அவரும் சேர்ந்து தான் பார்த்து வருகிறோம். அதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நில எடுப்பு தொடர்பான அனைத்து விசாரணைகளிலும் என் மனைவி ஆஜராகியுள்ளாரா என்றால் நாங்கள் இருவரும் சேர்ந்து தான் ஆஜராகியுள்ளோம். வழக்கு சொத்திற்கும் எனக்கும் தொடர்பு எதுவும் இல்லை என்றும், எனவே இந்த மனு விசாரணையில் ஆஜராக எனக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கும் எனக்கும் தொடர்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மேலும் அதன் பத்தி 6 மற்றும் 8ல் குறிப்பிட்டுள்ள ”Didnot Apply his mind” என்ற வார்த்தைகளை சொல்ல எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. 4(1) இன் கீழான அறிவிப்பிற்கு நாங்கள் அளித்த பதிலில் அங்கு மருத்துவமனை இருப்பதாக சொல்லியுள்ளோம். அதை அவர்கள் கருத்தில்

கொள்ளவில்லை. எனக்கு உரிமையற்ற சொத்தை பொருத்து மதிப்பை நிர்ணயிக்க சொன்ன அரசிற்கு அறிவுறுத்த எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. என் மனைவி சொத்திற்கு நானும் ஒரு சட்ட வாரிசு ஆவேன். அந்த உரிமை எனக்கு இதுநாள் வரை கிடைக்காத நிலையில் எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.